DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.181/2017**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : கிரேஸ்மேரி
Father/ Husband Name : இருதயராஜ்
Village :
Taluk :
Calling :
Age :

2ம் எதிரி ஆஜர். 1-ம்எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3,4 எதிரிகள் ஆஜராவதிலிருந்து மாண்புமிகு. உயர்நீதிமன்றத்தால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்காக வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேர்போகியில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 9 வருடங்களுக்கு முன்பு என் வீட்டில் காலை 07.00 மணியளவில் நானும் எனது கணவரும் இருந்தோம். கதிர் அறுத்து காயவைத்து சாக்கில் கட்டி வைத்திருந்தோம். அதை சண்டை நடந்ததற்கு முந்தைய நாள் 2 வது எதிரி பால்ராஜ் வீட்டு ஆடு வந்து இரவு 07.00 மணியளவில் தின்று விட்டது. நான் சென்று 2,3 எதிரிகளிடம் இந்த ஆட்டைக் கட்டக்கூடாதா என்று கேட்டேன். அதற்கு அவர்களும் பேசினார்கள். நானும் பதிலுக்கு பேசினேன். அதோடு முடிந்துவிட்டது.

2. பிறகு மறுநாள் காலை 07.00 மணியளவில் 1 வது எதிரி ஜான்சன் என் வீட்டிற்கு வந்து அரிவாளால் தலையின் பின்புறத்திலும், நடுமண்டையிலும், வலது கை கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே வெட்டிவிட்டார். 2,3 எதிரிகள் வந்து என்னுடன் மல்லுக்கட்டி என்னை அடித்து என்னை வயிற்றில் ஏறி மிதித்தார்கள். அதோடு எனக்கு மயக்கம் வந்தது. என் தங்கை செல்வி மற்றும் என் கணவர் ஆகியோர் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது

போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. என்னை போலீசார் விசாரிக்கும் போது சம்பவம் நடைபெற்றதற்கு 10 நாட்கள் முன்பு எதிரிகளின் ஆடு என் நெல்லை தின்றுவிட்டு போனதாக சொன்னேனா என்றால் ஆமாம். சண்டை நடக்கும் போது என் கணவர் வீட்டில் இருந்தாரா என்றால் இல்லை, அவர் வெளியில் தான் இருந்தார், என் தங்கை செல்வி அழுது சத்தம் போட்டதை கேட்டுதான் வந்தார். என் தங்கை செல்வி இறந்து 4 வருடத்திற்கு மேல் இருக்கும்.

2. நான் போலீசார் விசாரணையில் என் கணவருக்கு போன் செய்து அவரை வரவைத்ததாக சொன்னேனா என்றால் இல்லை. நான் புகாரை எங்கு வைத்து எப்பொழுது கொடுத்தேன் என்றால் அரசு மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன், 9 வருடம் ஆனதால் தேதி நினைவில்லை. நான் மருத்துவமனையில் 7 நாட்கள் சிகிச்சை பெற்றேன். சாட்சி அமுதாவிற்கு சண்டை பற்றி தெரியும் என்றால் சரிதான்.

3. என் வீட்டை கடந்து தான் எதிரிகளின் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் எதிரிகள் அவர்களுடைய வீட்டிற்கு என் வீட்டை கடந்து செல்லும் போது என் வீட்டை கடந்து செல்லக்கூடாது என்று பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பே பாதை பிரச்சனையால் எதிரிகளுடன் பேசிக் கொள்ளமாட்டேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த வாக்கு மூலத்தை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. 1ம் எதிரி அரிவாளை எடுத்து வெட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. 1-ம் எதிரி வெட்டப் பயன்படுத்திய அரிவாளைகாவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்கிற தேதியில் சொல்லும் நேரத்தில் 1ம் எதிரி சென்னையில் இருந்தார் என்றும் அவர் சம்பவ இடத்திற்கே வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 3-ம் எதிரி சம்பவ சமயத்தில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தங்கி படித்துக் கொண்டு இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மோயன்வயல் கிராமத்தை சார்ந்த பவுல்ராஜை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் எதிரிகளுக்கும் உள்ள

முன்விரோதத்தின் அடிப்படையில் பவுல்ராஜ் என்பவரின் தூண்டுதலின் பேரில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் மருத்துவரிடம் என்னை யார், யார் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் சொன்னது போல் 1ம் எதிரி என்னை வெட்டவில்லை என்றும் நான் குறிப்பிடும் காயம் நானும் எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயம் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர் என் காயத்திற்கு தையல் போட்டாரா என்றால் இல்லை, மருந்து போட்டார். 2, 3 எதிரிகள் என்னை வயிற்றில் மிதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.181/2017**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : இருதயராஜ்
Father/ Husband Name : கவரியேல்
Village :
Taluk :
Calling :
Age :

2ம் எதிரி ஆஜர். 1-ம்எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3,4 எதிரிகள் ஆஜராவதிலிருந்து மாண்புமிகு. உயர்நீதிமன்றத்தால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்காக வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தற்போது தேர்போகியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எதிரிகளை தெரியும். கடந்த 2016-ம் ஆண்டு ஒருநாள் காலை 05.00 மணிக்கு நான் நடைபயிற்சி சென்றிருந்தேன். என் மனைவி வீட்டில் இருந்தார். என்ன நடந்தது என்று தெரியவில்லை. நான் போய்விட்டு திரும்ப வந்து கொண்டிருந்த போது என் வீட்டில் சத்தம் கேட்டது. நான் போய் என் மனைவியிடம் கேட்ட போது என் மனைவி எதிரிகள் வந்து அடித்து விட்டதாக சொன்னார். என் மனைவியின் தலையிலும், கையிலும் இரத்தமாக இருந்தது. என் மனைவி கம்பால் அடித்ததாகவும், மிதித்ததாகவும் சொன்னார். பிறகு ஆம்புலன்சிற்கு போன் செய்து என் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மருத்துவமனையில் என் மனைவியிடம் போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. இந்த பிரச்சனை நடைபெறுவதற்கு முன்பு எதிரிகளும் நாங்களும் பேசிக் கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். இந்த பிரச்சனை நடைபெறுவதற்கு முன்பாகவும், பின்பாகவும் எதிரிகள் எங்கள் வீட்டை கடந்து போகக் கூடாது என்று பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல, வேறு நபர்கள் தான் அவர்கள் வீட்டு முன்பாக செல்லக்கூடாது என்று அடைத்துள்ளார்கள். நாங்கள் பாதையை அடைக்கவில்லை.

2. என் மனைவி எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் நினைவில்லை. நான் சொல்வது போல் எதிரிகள் என் மனைவியை காயப்படுத்தவில்லை என்றும் நான் குறிப்பிடும் காயம் நானும் எனது மனைவியும் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் நான் வந்து பார்க்கும் போது கம்பு அல்லது அரிவாள் எதையும் பார்த்தேனா என்றால் இல்லை.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.